Municipal councils (elections)

* 222 *Q.*—Sri SAW. GANESAN (on behalf of Sri M. KALYANASUNDARAM) : **Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state the details of the programme** for the elections to the municipal councils in this State?

The Hon. Sri S. M. A. MAJID : The details of the programme for the elections to the municipal councils in the State have not yet been finalized.

திரு. சா. கணேசன் : இன்னும் எவ்வளவு காலத்திற்குள் விவரம் தெரியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : விரிவாக திட்டம் தயாராகிக்கொண்டிருக்கிறது. 1962-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ந்தேதி புதுக் கவுன்சில் ஏற்பட வேண்டும் என்று சர்க்கார் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. முனு. ஆதி : நகர சபை தேர்தல் எப்பொழுது நடைபெறும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அறிவிப்பார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : திட்டவட்டமாக இன்னும் முடிவு செய்யப்படவில்லை. பரிசீலனையில்தான் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பிறகு முடிவு எடுக்கப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன் : ஏற்கனவே செப்டம்பர் மாத வாக்கில் நகரசபை தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் வருகிற தேர்தலில் காங்கிரஸ் கட்சி ஜெயிக்காது என்ற காரணத்தால் இந்த தேர்தல் தள்ளிப் போடப்பட்டுவருகிறதா என்பதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தள்ளிப்போட வேண்டுமென்ற பிரச்னை இல்லை. இன்னும் 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ந்தேதி கடந்துவிடவில்லை என்பதை மட்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

Shark liver oil factory

* 223 *Q.*—Sri MUNU. ADHI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) **whether there is any scheme to start a shark liver oil** factory in the State;

(*b*) **if so, whether it will be in the private sectoor or in public** sector; and

(*c*) what will be the Government's investment in it?

The Hon. Sri N. NALLA SENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) *to* (*c*) Sir, a scheme for starting a shark liver oil refining factory in this State in the public sector at an estimated non-recurring cost of Rs. 1·16 lakhs and a recuring cost of Rs. 1·29 lakhs is under the consideration of the Government.

திரு. முனு. ஆதி : ஸார், இந்த ஷார்க் லீவர் எண்ணெய்த், தொழிற்சாலையை பொதுத் துறையில் ஆரம்பிப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினார். எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும் என்பது அறிவிக்கப்படுமா ? அதற்கு கேரள சர்க்காருடைய ஒத்துழைப்பு கிடைக்குமா ? அல்லது நமது சர்க்காரே சொந்த முறையில் நிறுவ உத்தேசித்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

10th July 1962]

கனம் திரு. என். நல்ல சேனுபதி சர்க்கரை மன்ருடியார் : மலேயா எமிக்ரேஷன் டிப்பார்ட்மெண்டிலிருந்து ஒரு இடம் வாங்கப்பட்டிருக்கிறது. அங்கே ஆரம்பிக்கவேண்டும் என்று சர்க்கார் கவனத்தில் வைத்துக்கொண்டிருக்கிருர்கள்.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : எந்தெந்த இடங்களில் இந்த ஷார்க் மீன்கள் கிடைக்கின்றன என்பதை அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. என். நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இதற்கு தனி கேள்வி போடவேண்டும்.

திரு. மு. கருணுநிதி : இதைப்போல், எந்த எந்த வகை மீன்களிலிருந்து எண்ணெய் எடுக்கின்ற தொழிற்சாலே நிறுவ அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறது ?

கனம் திரு. என். நல்ல சேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அதற்கு வேண்டிய தகவல் என்னிடம் இப்பொழுது இல்லே. தனியாகக் கேள்வி கேட்டால் பதில் அளிக்கலாம்.

Tourist homes

* 224 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Information be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a Tourist bungalow at Tiruchendur;

(*b*) if so, the place and the probable expenditure; and

(*c*) when will it be taken up for execution?

THE HON. SRI G. BHUVARAHAN : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.

திரு. எம். எஸ். செல்வராஜன் : மூன்ருண்டுகளுக்கு முன்பு, சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் செலவில், டூரிஸ்ட் பங்களா ஒன்று கட்டுவதற்க ன திட்டம் இருந்து, அதைவிட அதிகச் செலவில் பெரிய அளவில் கட்டவேண்டுமென்ற யோசனேயினுல் அது ஒத்திப்போடப்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கம் அறியுமா ? அப்படிப்பட்ட திட்டம் இருந்திருக்கிறதென்ற தகவலேத் தெரிந்து, அந்தத் திட்டத்தை பரிசீலனே செய்து, டூரிஸ்டு பங்களாவைப் பெரிய அளவில் கட்டுவதற்கான முயற்சி எடுக்கப்படுமா ?

கனம் திரு. ஜி. பூவராகன் : அம்மாதிரி திட்டம் ஒன்றும் பரிசீலனேயில் இருந்ததாகத் தெரியவில்லே. அற நிலேயப் பாதுகாப்பு போர்டார், திருச்செந்தூரில் 84 அறைகள் கொண்ட ஒரு கட்டிடம் கட்டுவதற்காக ஏற்பாடு செய்துகொண்டிருக்கிருர்கள். அதனுல், அரசாங்கத்தார் அங்கே டூரிஸ்ட் பங்களா கட்டுவதாக உத்தேசம் இல்லே.

* 225 கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர் : கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உதகையில் கட்டவிருக்கும் டூரிஸ்ட் ஹோம் எப்போது கட்டி முடிக்கப்படும் ?

(இ) அதில் எத்தனே அறைகள் கட்டப்படும் ?

(உ) அதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ?

கனம் திரு. ஜி. பூவராகன் : (அ) இந்த வேலே 1962-63 முடிவுக்குள் முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது ;

(இ) 30 ஒற்றை நபர் அறைகள், 14 இரட்டை நபர் அறைகள், 3 பொது அறைகள் ; ஒரே சமயத்தில் மொத்தம் 70, 75 பேர்கள்வரை தங்கலாம் ;

(உ) ரூபாய் ஏழு லட்சம்.